# புலிகளுக்கு ஆதரவாக கூட்டம் நடத்த முயன்ற

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2028 தை 06 இதழ் 343

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 9 — 01 — 1993

## தமிழக தலைவர்கள் கைது

(சென்னை)

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் உட்பட மூன்று முக்கிய தலைவர்கள் நேற்று முன்தினம் சென்னையில் வைத்து தமிழக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் தளபதி திரு. கிட்டு உட்பட 10 போராளிகளின் மரணத்தை கேள்வியுற்ற இவர்கள் ஆத்திரமுற்ற நிலையில் தங்களது ஆதரவாளர்களுடன் சென்னையில் கூட்டம் நடாத்த முற

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழக பொலிஸார் முழு உஷார் நிலையில்

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தளபதி திரு. கிட்டும் ஏனைய 9 போராளிகளும் வங்கக் கடலில் வீரச்சாவெய்திய சம்பவம் குறித்து தமிழகத்தில் பெரும் எதிர்ப்பு தோன்றலாமென்று கருதி தமிழக பொலிஸார் உஷார் நிலையில் வை

(4-ம் பக்கம் பார்க்க)

# திருமலையில் புலிகள் அதிரடி

# அதிகாரி உட்பட 14 ராணுவம் பலி

## ஆயுதங்களும் மீட்பு

(திருமலை)

திருமலை புல்மோட்டையில் நேற்றுக்காலை விடுதலைப்புலிகள் சுற்றி வளைத்து நடத்திய தாக்குதலில் ஒரு உயர் அதிகாரி உட்பட 14 இராணுவத்தினர் பலியானுர்கள். ஏ. கே. இலகு இயந்திரத்துப்பாக்கி உட்பட பத்து நவீனரக துப்பாக்கிகள் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன. எட்டுப்புலிகள் இத்தாக்குதலில் வீரச்சாவு அடைந்துள்ளார்கள். (4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்துடனுன மோதலில் எட்டு புலிகள் வீரச்சாவு

(யாழ்ப்பாணம்)

புல்மோட்டையில் நேற்று ராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் எட்டு விடுதலைப் புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்தவர்கள் விபரம்:- திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் மேஜர் அருண்மொழி அல்லது கௌதமன் (சுப்பிரமணியம்

(4-ம் பக்கம் பார்க்க)

## இந்தியாவின் இழிசெயலை கண்டித்து ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

தமிழரின் தன்மானத்தை, வீரத்தை உலகிற்கு பறைசாற்றிஇந்தியாவின்வேசத்தை வெளிக்கொணர்ந்த கேணல் கிட்டுவுடன் ஒன்பது வீர வேங்கைகளின் வீரச்சாவை அஞ்சலிப்பதற்கும் இந்தியாவின் இழிசெயலை கண்டிப்பதற்குமான இறுதி ஊர்வலமும் அதனை தொடர்ந்து பொதுக்கூட்டமும் திருவிலில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பத்து வீரவேங்கைகளினதும் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி விடுதலைப்

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். குடா 2-ம் நாளாக பெரும்சோகத்தில் மூழ்கியது

(யாழ்ப்பாணம்)

தளபதி கேணல் கிட்டுவிற்கும் அவருடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட ஏனைய 9 போராளிகளினதும் நினைவாக நேற்று பூரண துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இன்றும் துக்க தினம் அனுஷ்டிக்கப்படும். நாளை பூரண ஹர்த்தால் தினமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

நேற்று யாழ். செயலகம் உட்பட அனைத்து அரச காரியாலயங்களிலும் அரைக்

(4-ம் பக்கம் பார்க்க)



## நரசிம்மராவ், ஜெயலலிதா கொடும்பாவிகள் பல எரிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய அரசு, ஈழத் தமிழ் மக்களுக்கு இழைத்து வரும் கொடுமைகளையும், நாசகாரச் சதி வேலைகளையும் கண்டித்து, இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவ், தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆகியோருக்கு எதிரான ஊர்வலங்களும் கொடும்பாவி எரிப்புச் சம்பவங்களும் யாழ். நகரத்தின் பல பகுதிகளில் நேற்றும் இடம்பெற்றன.

தீவக நலன் காக்கும் பிரிவு, நல்லூர்ப் பிரதேச வர்த்தகர்

(4-ம் பக்கம் பார்க்க

## இலங்கைப் படையினர் உஷார் நிலையில்

(கொழும்பு)

கொழும்பு உட்படச் சகல பகுதிகளிலும் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

திரு கிட்டு உட்பட பத்துப் போராளிகள் இந்தியக் கடற் பிராந்தியத்தில் மரணமடைந்ததை அடுத்து. விடுதலைப் புலிகள் எவ்வேளையிலும் இலங்கை இராணுவத்தினர் மீது தாக்குதலை மேற்கொள்ளலாம் என்ற அச்சம் காரணமாகவே பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

## கடலில் பிடித்த 9 பேரையும் இந்தியப் படை கொண்டு சென்றது

### விசாகபட்டினத்தில் தடுத்துவைப்பு

சென்னை)

தளபதி கிட்டுவுடன் "எம். வி. அகத்' என்ற கப்பலில் வந்து பின் இந்திய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட ஒன்பது பேரும் நேற்று முன்தினம் விசாகப்பட்டினம் கடற்படைத்தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இவர்களுடன் காயமடைந்திருந்த சற்குணலிங்கம், கிருஷ்ணமூர்த்தி ஆகிய இருவரும்

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ அமெரிக்காவின் 40 ஏவுகணைகள் ஈராக்கை தாக்கின

(வாஷிங்டன்)

அமெரிக்கா. ஈராக் மீது 40 ஏவுகணைகளை உபயோகித்து நேற்றுமுன்தினம் தாக்குதல் நடாத்தியது.

எந்த விதத்திலும் விட்டுக்கொடுக்காத ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனுக்கு எதிராக தொடர்ந்தும் தாக

(4-ம் பக்கம் பார்க்க)

## தூக்குமேடையில் ராவ், ஜெயலலிதா

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் நரசிம்ம ராவுக்கும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு 'மரணதண்டனை' விதிக்கப்பட்டுள்ளது என்ற சுலோகம் ஒன்று யாழ் பஸ் நிலை

(4-ம் பக்கம் பார்க்க)

## சவூதி மீது ஈராக் தாக்குதல் ஈராக் மீது விமானத் தாக்கு

(பாக்தாத்)

அமெரிக்காவும் அதன் நேச நாட்டுப் படைகளும் நேற்று காலை ஈராக் மீது மீண்டும் விமானத் தாக்குதல் தொடுத்துள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளின் 25 போர் விமானங்கள் பாதுகாப்புக் கொடுக்க நான்கு 'ரொனடோ' என்ற குண்டு

(4-ம்பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**வீடு தேவை**

வங்கி ஊழியர் ஒருவர் தனது குடும்பத்துடன் வசிப்பதற்கு வீடு வாடகைக்குத் தேவை. ஆனைப்பந்தி கந்தர் மடம் விரும்பத்தக்கது. தொடர்பு: விளம்பர இல C-7151, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (இ-7151)

**வியாபாரிகளுக்கு**

தரமான இமிரேசன் கோல்ட் கவரிங் நகைகள் மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகப் பெற்றுக் கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2785)

**சிவாஸ் ஸ்ருடியோ இடமாற்றம்**

பண்டத்தரிப்பில் இயங்கி வந்த சிவாஸ் ஸ்ருடியோ தற்பொழுது சித்தங்கேணியில் இயங்கிக் கொண்டு இருக்கிறது. சிறந்த முறையில் வீடியோ, கலர் கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் மற்றும் தேசிய அடையாள அட்டைப் படங்கள் சிறந்த முறையில் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம். "சிவாஸ் ஸ்ருடியோ, சித்தங்கேணி, வட்டுக்கோட்டை. (சி-7106)

## வடமராட்சியில் மலேரியா

(தாளையடி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் செம்பியன்பற்று, தாளையடி, நாகர்கோவில் பகுதிகளில் இடம் பெயர்ந்தோர் தங்கியுள்ள குடிசைகளுக்கு மலத்தியோன் தெளிக்கும் வேலை அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதுடன் மலேரியாக் காய்ச்சல் வேகமாகப் பரவுவதால் அதனைக் கட்டுப்படுத்த மலத்தியோன் தெளிக்கப்பட்டு வருகிறது. (163)

**NEW ENGLISH ACADEMY**

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

SPECIAL ENGLISH CLASSES

B. A G. A. Q
Year 11, 10, 9 (English Lit)
சனி/ஞாயிறு)

Dr. A. Sinnathamby
(Retd Education officer English)

SPOKEN ENGLISH WITH GRAMMAR
G. C. E (O/L) 1993 Dec
Year 11, 10, 9, 8, 7, 6

BY
R. SIVALINGAM
(Dip-in-English)

வகுப்புகள் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன அனுமதியை உடன் பெறவும்.

நிர்வாகி

(ஏ-2799)

**கண்ணீர் அஞ்சலி**

தளபதி "கிட்டு" மற்றும் ஒன்பது வீரவேங்கைகளின் உயிர்த்தியாகத்திற்கு

எமது கண்ணீர் அஞ்சலிகள்

**சைன் கல்வியகம்**

(மூனயியற் பிரிவு)

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

(சி-7152)

**கண்ணீர் அஞ்சலி**

கப்பலைத் தகர்த்து வீரச்சாவடைந்த

**கேணல் "கிட்டு"** விற்கும்

ஏனைய வீரவேங்கைகளுக்கும்

எமது

கண்ணீர் அஞ்சலிகள்

**கலாலயா**

விக்டோரியா வீதி, யாழ்நகர்.

(ஏ-2800)

வடமராட்சி உழவுயந்திர உரிமையாளர் சங்கத்தின்

**கண்ணீர் அஞ்சலிகள்**

களம் பல நடாத்தி தமிழீழத்தின் இறைமையை நிலைநாட்டி யாழ்.மாவட்டத்தின் தளபதியாய் இருந்து சர்வதேச விவகாரப் பொறுப்பாளரும், இணைப்பாளரும் ஆன

**கேணல் "கிட்டு மாமா"**

அவர்களுக்கும் ஏனைய ஒன்பது வீரவேங்கைகளுக்கும்

தன்மானத் தமிழன் தரணியில் எவரும் தலைவணங்கிச் சரணடைய மாட்டான் என்பதை உலகுக்கு காட்டக்கூடிய வன் ஈழத்தமிழன் என்ற வரலாற்றை நிலைநாட்டி தன் இன்னுயிரை ஈந்த எம்வீர மறவர்களுக்கு

எங்கள் இதயக் குமுறல்களுடன் நிரம்பிய கண்ணீர் அஞ்சலிகள்

**வடமராட்சி உழவுயந்திர உரிமையாளர் சங்கம்**

(சி 7153)

## கடைகள் உடைத்து பொருட்கள் திருட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை உத்திராவத்தையிலுள்ள புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க புலோலி கிழக்கு மத்திய கிளை கடந்த சனிக்கிழமை இரவு உடைக்கப்பட்டு சுமார் 12,000 ரூபா பெறுமதியான பாவனைப் பொருட்களும் அதற்கு அருகாமையிலுள்ள மற்றொரு கடை உடைக்கப்பட்டு சுமார் 8,000 ரூபா பெறுமதியான பொருட்களும் பணமும் திருடப்பட்டுள்ளதாக புகார்செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ காவல் துறையினர் இத்திருட்டுக்கள் சம்பந்தமாக விசாரணைகள் செய்து வருகின்றனர். (52)

## பயறு, கௌபி பயிரிட ஊக்குவிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சியில் வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை வெங்காயச் செய்கையின்போது ஊடுபயிராக பயறு, கௌப்பி என்பன வற்றைப் பயிரிடுமாறு ஆலோசனை வழங்கியுள்ள 'ஊற்று நிறுவனம்' வெங்காயச் செய்கையின் ஊடுபயிராக பயறு, கௌபி என்பனவற்றைப் பயிரிடும் விவசாயிகளுக்கு பயறு, கௌபி விதைகள், மண்ணெய்ணெய் என்பனவற்றை வழங்கவுள்ளதாக ஊற்று நிறுவனம் தெரிவித்துள்ளது.

இவற்றினை பெற்றுக் கொண்டு விவசாய உற்பத்திகளை மேம்படுத்த விரும்பும் விவசாயிகள் புலோலியிலுள்ள ஊற்று நிறுவன திட்ட அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 52,

## தீவக ஊழியருக்கு இடமாற்றம் இல்லை

(யாழ்ப்பாணம்)

தீவகப் பகுதியிலுள்ள அரச திணைக்களங்களிலும், வைத்தியசாலைகளிலும் கடமையாற்றி வரும் யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த எந்த ஒரு ஊழியர்களுக்கும் இடமாற்றம் இல்லை என அரசு அறிவித்திருக்கிறது.

வருடாவருடம் அரசினால் வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்வது ஒரு உத்தியோகத்தர் தாம் விரும்பிய இடத்திற்கு மாற்றலாகிச் செல்வது வருடாவருடம் அந்தந்தத் திணைக்கள உயரதிகாரி [illegible] நடைமுறைப் படுத்தப்பட்டு வருவது வழக்கம்.

ஆனால் தீவகப் பகுதியில் உள்ள அரச உத்தியோகத்தர் பலர் அரசாங்கத்திடம் 93-ம் ஆண்டுக்கு யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர் விண்ணப்பித்திருந்தனர். ஆனால் அரசினால் அனுமதி மறுக்கப்பட்டிருப்பதனால் தொடர்ந்தும் தீவகப் பகுதிக்குள் கடமையாற்றும்படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. (56)

## இராசி பலன்

19-01-1993
செவ்வாய்க்கிழமை
(தமிழுக்கு தை 06)

துவாதசி மு. இ. 9-59 வரை! கேட்டை மு. இ. 10-19 வரை சித்தாமிர்தம், இராகுகாலம் மாலை 3-35 முதல் 5-05 வரை சுபநேரம் காலை 11-05 முதல் 12-05 வரை.

மேடம்: பணநெருக்கடி, அன்னியர் தொல்லை, அலைச்சல்

இடபம்: உடன்பிறந்தோர் நன்மை தனவரவு, மன மகிழ்ச்சி.

மிதுனம்: புதிய அனுபவம், எதிர்பார்த்தவாய்ப்பு, காரிய சித்தி.

கடகம்: மனச்சலனம், தப்பபிப்பிராயம், வாக்கு தவறுதல்.

சிங்கம்: குடும்பபூசல், வீணச் செலவு, இலேசான விரோதம்.

கன்னி: தொழில் சிறப்பு, மனமாற்றம், தியாக சிந்தனை.

துலாம்: பலவிததுன்பம், கெட்ட பெயர், மன அமைதியின்மை.

விருச்சிகம்: நல்லோர் சந்திப்பு, செல்வாக்கு, தரும சிந்தனை.

தனுசு: மேலதிகாரிகள்நிர்ப்பந்தம், கடன்சுமை, வெறுப்பு

மகரம்: நண்பர் உதவி, பிறரது வஞ்சனை, வாக்கு சாதுரியம்.

கும்பம்: மந்தமான நிலைமை பிறர் அறிவுரை, பதவிமாற்றம்

மீனம்: மனவேதனை, தொழில் முடக்கம், குடும்ப பிரிவு.

- ஜோஸ்யர்

## எழுத்தாளரை ஊக்குவிக்க குழு

(உடுவில்)

ஈழத்து எழுத்தாளர்களை வளர்க்கவும், ஊக்குவிக்கவும், அவர்கள் எழுதிய படைப்புகளை நூல் உருவில் ஆக்கி வெளியிடவும், நூல்களின் விற்பனையை ஊக்குவிப்பதற்குமான எழுத்தாளர் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் அமைப்புக் குழுவின் உறுப்பினர்களாக டொமினிக் ஜீவா, கோப்பாய் சிவம், டானியல் அன்ரனி, யோசேப் பாலா, டேவிட் கிகோரி ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (109

## கண்டெடுக்கப்பட்ட பொருட்கள்

வீரவாணி, புத்தூர் கிழக்கைச் சேர்ந்த தம்பித்துரை சத்தியதேவா என்பவருடைய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

0 0

காங்கேசன் துறையைச் சேர்ந்த சின்னத்துரை ஆனந்தராசா என்பவருடைய அடையாள அட்டை பேஸ்சுடன் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

## ★ இந்திய மந்திரிசபையில் மாற்றம்

# 14 அமைச்சர்கள் பதவிநீக்கம் புதிதாக 14 பேர் நியமனம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் பி வி நரசிம்மராவ் தமது அமைச்சரவையை மாற்றியமைத்துள்ளார். 14 அமைச்சர்கள் நீக்கப்பட்டு 14 புதிய அமைச்சர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இரு துணை அமைச்சர்களுக்கு பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் வேறு 13 அமைச்சர்களும் மத்திய அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பெயர் விபரம் வருமாறு: திரு. அசோக் ஜகந்நாத், எம். எம். ஜேக்கப், பேராசிரியர் ஜி. கே. சூரியன், டாக்டர் கிரிஜா மோகன், திரு. சாந்தாராம் போலிகே, திரு. முல்லைபள்ளி இராமச்சந்திரன். திரு. பல்பீர்சிங், எம். ஓ. எச். பாரூக், திருமதி டி. சே சாராதேவி மற்றும் செல்வி மம்தா பானர்ஜி ஆகியோராவர். இவர்கள் அனைவரும் இணை அமைச்சர்களாவர்.

மற்றும் அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்ட துணை அமைச்சர்கள் வருமாறு: திரு. எஸ். பி. நயனகௌடா, திருமதி கே. கமலாகுமாரி, டாக்டர் கிரிஜா வியா ஆகியோராவர்.

நரசிம்மராவ் அமைச்சரவையில் 4 கபினட் அமைச்சர்களும 6 இணை அமைச்சர்களும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்

மேலும் திரு. சல்மான் குர்ஷித், திரு. ரங்கையநாயுடு, ஆகிய இரு துணை அமைச்சர்களும் தற்பொழுது இணை அமைச்சர்களாக பதவி உயர்த்தப்பட்டனர்.

புதிய அமைச்சர்கள் பெயர் விபரம வருமாறு:

திரு. தினேஷ்சிங், திரு. பிரணாப் முகர்ஜி, திரு. ஏ. கே. அன்ரனி, திரு. என். கே. பி. சால்வே, மற்றும் 6 புதிய இணை அமைச்சர்களாக கப்டன் சதீஸ்சர்மா, திரு. புவனேஸ் சதுர்வேதி, திரு. அரவிந்த் மேத்தம், திரு. சந்திரசேகரமூர்த்தி. திரு. முக்குல் வாஜ்பே, டாக்டர் எப்ரா அகமட் ஆகியோராவர். (க)

## மண்ணெண்ணை தே. எண்ணை விலை வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டுப் பகுதிகளுள் மண்ணெண்ணை, தேங்காயெண்ணை விற்பனைக்கு வந்துகொண்டிருப்பதனால் அவற்றின் விலைகளில் வீழ்ச்சி ஏற்பட்டு வருகிறது

120 ரூபா வரையில் விற்கப்பட்டு வந்த ஒரு போத்தல் தேங்காயெண்ணை 50 ரூபா தொடக்கம் 60 ரூபா வரையில் நேற்று விற்கப்பட்டது

மண்ணெண்ணையும் போத்தல் 75 ரூபாவிலிருந்து 100 ரூபா வரையில் விற்கப்பட்டு வருகிறது.

தேங்காயும் தற்போது குடாப் பகுதிச் சந்தைகளில் விலை குறைந்து வருகின்றது. 45 ரூபா வரையில் விற்கப்பட்ட தேங்காய் 25 ரூபா வரையில் விற்கப்பட்டு வருகிறது. (159)

## யாழ். மாநகரசபை நூலக அபிவிருத்திக்கு 12 லட்சம் ரூபா ஒதுக்கீடு

(திருநெல்வேலி)

யாழ். மாநகர சபையினரால் இவ்வாண்டுக்கான நூலக அபிவிருத்திக்கென 12 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இப்பணத்தின் மூலம் நூலகத்திற்கான நூல்கள் பெருமளவில் கொள்வனவு செய்யப்படவுள்ளது. வங்கியியல் சார் நூல்களும், வர்த்தகவியல் சார் நூல்களும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான நூல்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ். நகரில் நடந்த வங்கியாளர் சங்க அங்குரார்ப்பண விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இத்தகவலை அவர் வெளியிட்டார். (157)

## 80 பொது வேலைநிறுத்தத்தில் வேலை இழந்தோருக்கு வேலை வழங்க முடிவு

(கொழும்பு)

1980ம் ஆண்டு ஜூலை மாதம் இடம்பெற்ற பொது வேலைநிறுத்தத்தை தொடர்ந்து உரிய காலத்திற்குமுன் ஓய்வில் அனுப்பப்பட்ட ஊழியர்கள் அனைவரும் மீண்டும் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக பொதுநிர்வாக மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் துரிதகதியில் இடம்பெறுவதாகவும் மேற்படி வேலையிழந்த ஊழியர்களை மீண்டும் வேலைக்கு சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## ஓய்வூதியருக்கு 300 ரூபா அலவன்ஸ்

(கொழும்பு)

இம்மாதம்முதல் ஓய்வூதியர்களுக்கு 300 ரூபா அலவன்ஸ் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பட்ஜட்டில் ஓய்வூதியருக்கு மேலதிகமாக கொடுப்பதென அறிவித்த 300 ரூபா அலவன்ஸ் ஓய்வூதியத்துடன் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## ஓய்வூதிய விண்ணப்பங்கள்

(மானிப்பாய்)

யாழ் செயலக ஓய்வூதிய கணிப்புப் பிரிவில் இதுவரை 52 பேரின் ஓய்வூதிய விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டுள்ளன.

இவை யாழ் கல்வித் திணைக்களம், சுகாதாரத் திணைக்களம், தபால் திணைக்களம் ஆகியவற்றிலிருந்தே கையளிக்கப்பட்டுள்ளன. இவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் யாழ் அரச அதிபர் கொழும்பிலிருந்து வந்து சேர்ந்ததும் மேற்கொள்ளப்படுமென்று தெரிவிக்கப்படுகிறது. (71)

## ★ டென்மார்க் மனித உரிமைகள் குழு இன்று மட்டுநகர் விஜயம்

(கொழும்பு)

டென்மார்க் நாட்டு மனித உரிமைகள் குழு இன்று செவ்வாய்க்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளது.

இக்குழு மட்டு. சமாதானக் குழு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து கலந்துரையாடுவதுடன், மட்டக்களப்பு பகுதியில் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் ஆராயவுள்ளனர்.

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த மூவர் இக்குழுவில் அங்கம்வகிப்பதாகவும் கூறப்படுகிறது. —க

## உண்ணாவிரதமிருந்த முன்னால் பிரதமர் வி. பி. சிங் பொலிஸாரினால் கைது

(புதுடில்லி)

இந்தியாவின் முன்னாள் பிரதமரும் ஜனதா தள் தலைவருமான வி. பி. சிங் நேற்று முன்தினம் பம்பாய் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பம்பாய் கலவரங்களையடுத்து காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்ட வி. பி. சிங் தற்போது மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவரது உடலில் நீர்த்தன்மையின் அளவு குறைந்துவருவதாக மருத்துவர்கள் எச்சரித்துள்ளனராம். (க)

## அரச ஊழியர்க்கு சம்பளம் உயர்வு

(கொழும்பு)

சகல அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 1993ம ஆண்டு தொடக்கம் அதிகரிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 37/92 இன் பிரகாரம் இவ் அதிகரிப்பு வழங்கப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளையில் கடந்த வரவு செலவுத் திட்டத்தின்போது அரசாங்க ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு 30 வீதம் எனக் கூறப்பட்டபோதிலும் அநேகமானோருக்கு 40 வீத சம்பள அதிகரிப்பு கிடைக்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. —க

## உணவு பொருட்கள் விநியோகம் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் கடந்த இரு மாதங்களாக இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கி வந்த உணவுப் பொருள்கள் நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கையினால் காணாமல் போனோர் தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் படுகாயத்திற்குள்ளானோர் இறந்தோர் ஆகிய குடும்பங்களுக்கே தற்போது உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (56)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போட ஏற்பாடு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை பொது சுகாதார பரிசோதகர் பிரிவில் நாளை 20ம் திகதி புதன்கிழமை வீட்டு வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடப்படவுள்ளது.

சித்தன்கேணி அலைநகர் நேருஜி சனசமூக நிலையத்தில் காலை 8-30 — 10-00 மணி வரையும், வட்டுக்கோட்டை பிரதேச உப பணிமனையில் காலை 10-15 — 11-45 மணி வரையும் சங்கரத்தை கிராம அபிவிருத்திச் சங்கத்தில் நண்பகல் 12-00 — 1-30மணிவரையும் நாய்களுக்கு தடுப்பூசி போடுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன

தடுப்பூசி போடப்படாது வீதிகளில் காணப்படும் நாய்கள் கட்டாக்காலி நாய்களாக கருதப்பட்டு அழிக்கப்படவுள்ளதாக இப்பகுதி சுகாதார பரிசோதகர் திரு. வி. சிவமோகன் தெரிவித்துள்ளார். (139)

# தமிழ் அகதிகள் விடயத்தில் ஐரோப்பிய நாடுகள் மாற்றம்

## வெளியேற்றவும் முயற்சி

(ஸ்ரொக்ஹோம்)

ஆரம்பத்திலிருந்து இலங்கை தமிழ் அகதிகளுக்கு அனுதாபம் காட்டிய ஐரோப்பிய நாடுகள் தற்பொழுது தமது நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக டென்மார்க், நோர்வே ஆகிய நாடுகளே இலங்கை தமிழர் விடயத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை தமிழ் அகதிகளை பொறுத்தவரையில் இலங்கையில் நடைபெறும் இனப்போரைபயன்படுத்தி தமது பொருளாதார நிலையை மேம்படுத்தவே இவ் அகதிகள் மேற்படி நாடுகளுக்கு வருகை புரிவதாக அந்நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன.

அந்நாடுகள் மேலும் தெரிவிக்கையில்: இலங்கையில் இனப்பிரச்னை என்பதனை சாக்காக வைத்து ஐரோப்பிய நாடுகளுக்கு வரும் இலங்கை தமிழர்கள் கள்ளக் கடத்தலிலும் மற்றும் குற்றச்செயல்களிலும் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளையில் டென்மார்க்கைப் பொறுத்த வரையில் இலங்கை தமிழர்களின் குடிவரவை கட்டுப்படுத்த எடுக்கும் முயற்சிகளுக்கு அந்நாட்டு அரசியல் சட்டம் இடமளிக்காததையிட்டு நிர்வாக ரீதியான வழிமுறைகளை கையாளவேண்டி ஏற்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக டென்மார்க் பிரதமர் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டி ஏற்பட்டதும் தெரிந்ததே. (க)

## இடம்பெயர்ந்தவர்களுக்கு சுகாதார வசதிகள் செய்து கொடுக்கப்படும்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கான மலசல கூடவசதிகளை செய்து கொடுக்கும் பொறுப்பினை சர்வோதய மருதனார்மடக்கிளை பொறுப்பேற்றுள்ளது.

சுகாதார வசதிகளை கவனிக்கவும் காயப்பட்டவர்களை பராமரிக்கவும் செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது.

அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்கும் முகமாக உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் உதவி அரசாங்க அதிபர் செல்வி தனுஜா தணிகாசலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேற்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன

சிரேஷ்ட சுகாதார பரிசோதகர் திரு சிங்கராசா செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள், கிராமசேவையாளர்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்

எதிர்காலத்தில் இடம்பெயர்ந்துவரும் அகதிகளை தங்க வைப்பதற்கான முகாம்களாக உடுவிலில் மூன்று. இணுவிலில் இரண்டு. தாவடியில் ஒன்று, கந்தரோடையில் இரண்டு, சுன்னாகத்தில் இரண்டு பாடசாலைகளாக மொத்தம் பத்து பாடசாலைகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன. (109)

# "தமிழீழ மக்களுக்கு — இந்தியஅரசு இழைத்துவரும் சதி வேலைகளை நிறுத்தவேண்டும்"

## வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம்

(யாழ்ப்பாணம்)

சுதந்திர விடுதலைக்காக போராடும் தமிழீழ மக்களுக்கு இந்திய அரசு தொடர்ச்சியாக இழைத்துவரும் கொடுமைகளையும் நாசகார சதிவேலைகளையும் உடன் நிறுத்திக்கொள்ளவேண்டும் என்று தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

தளபதி கிட்டு உட்பட பத்து விடுதலைப் புலிகள் வங்கக் கடலில் இந்தியாவின் சதி முயற்சியினால் பலியான சம்பவத்தை கண்டித்து தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்திய அரசு எமதுதேசியப் பிரச்சினையில் பல தடவைகள் அப்பட்டமாக தலையிட்டு தமிழினத்தை ஆத்திரம் கொள்ள வைத்திருக்கிறது. தற்போது மீண்டும் ஒரு தடவை கோழைத்தனமாக கேவலமான முறையில் தமிழ்மக்களுக்கு துரோகமிழைத்திருக்கிறது. இச்செயலானது சர்வதேச சட்ட திட்டங்களுக்கு எதிரானதும், மனித உரிமைகளை மதிக்காமல் மீறும் செயலாகும். இதனை உலகநாடுகள் வன்மையாக கண்டிக்க வேண்டும்.

கடலில் களப்பலியான வேங்கைகளுக்கு அஞ்சலி செலுத்துவதுடன், இந்திய அரசின் இக்கோழைத்தனமான செயலை உலக அரங்கில் அம்பலப்படுத்த அனைத்து தமிழீழ மக்களும் அணிதிரளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம், எனவும் தமிழீழ வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ரி)

# கிளாலிபடகுசேவை வியாழன் ஆரம்பம்

(திருநெல்வேலி)

நேற்று முன்தினம் முதல் தடைப்பட்டிருந்த கிளாலிப் பாதையூடான படகுப் போக்குவரத்து தொடர்ந்து இன்றும் நாளை புதன்கிழமையும் நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் வியாழக்கிழமை முதல் இப்போக்குவரத்துச் சேவை இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த போராளிகளின் துக்கதினம் அனுஷ்டிப்பாலேயே இப்படகுசேவை இடம் பெறவில்லை எனவும் தெரியவருகிறது (157–158)

கிரிக்கெட்

## இங்கிலாந்து வெற்றி

(புதுடில்லி)

இந்திய–இங்கிலாந்து அணிகளுக்கிடையில் டில்லியில் நடைபெற்ற 1வது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இங்கிலாந்து அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஸ்கோர் விபரம்: இந்தியா 48 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 223 (கம்பிளே -100, ரெண்டுல்கர் -81) இங்கிலாந்து 48ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 224. (சி)

### தமிழக பொலிஸார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளனராம்.

தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவாக கூட்டங்கள், பேரணிகள் நடாத்த முற்படுவோரை தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு தமிழக அரசு அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது

தளபதி கிட்டுவின் வீரமரணம் குறித்து தமிழக பத்திரிகைகள் பல, முக்கியத்துவம் கொடுத்துள்ளன. (சி)

### அமெரிக்காவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆக்கப் படாதப்படுமென்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

'ரொம்கோ' என்ற அந்த ஏவுகணைகள் பாக்தாத்துக்கு அருகிலுள்ள செபரனியா என்ற இடத்தில் விழுந்தபோது ஒரு அணுவாயுத தொழிற்சாலை நிர்மூலமாக்கப்பட்டுள்ளது. இதை ஈராக் அரசாங்கமும் உறுதி செய்துள்ளதென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத்திலுள்ள ஹோட்டல் ஒன்றிலும் ஒரு ஏவுகணை தாக்கியது. ஹோட்டலில் கடமையாற்றிய இரண்டு பெண் வரவேற்பாளர்கள் மரணமாகியுள்ளனர். இந்த ஹோட்டலில் தங்கியிருந்த 51 வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டன நகர்ப்புறத்தில் இரண்டு வீடுகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

### புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டபோதே கைதுசெய்யப்பட்டனர்

திரு. நெடுமாறனுடன் தமிழக சட்டப் பேரவையின் முன்னாள் சபாநாயகர் புலமைப்பித்தன் தமிழ் தீவிரக் குழுவான 'விடுதலைக் குயில்கள்' அமைப்பின் தலைவர் திரு ப. வீரபாண்டியன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டனர் வேறு சில தலைவர்கள் மீது பொலிஸ் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. (க–சி)

### தூக்குமேடையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் தூக்கு மேடை ஒன்றும் அமைக்கப்பட்டு அதில் நரசிம்மராவ், செல்வி ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் தொங்கவிடப்பட்டுள்ளன

இந்திய அரசாங்கத்தின் சதிவேலையால் கேணல் கிட்டுவும் ஒன்பது போராளிகளும் வீரச்சாவு அடைந்த துயரத்தில் பொது மக்கள் பிரதமா நரசிம்மராவுக்கும், செல்வி ஜெயலலிதாவுக்கும் இந்த தூக்குத் தண்டனையை விதித்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (சு)

இதேவேளை அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதி திரு. பில் கிளின்டன் ஐ. நா. வின் தீர்மானங்களை ஈராக் மதித்து நடக்கவேண்டுமென்றும் கூறியுள்ளார். (சு–க)

### கடலில் பிடித்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மருத்துவமனையொன்றில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் ஒரு சடலமும் கடற்படைத்தளத்திற்கு கொண்டுவரப்பட்டதாகக் கூறப்படுகிறது

இச்சடலம் அசோக் பாபு என்பவருடைய சடலமென அடையாளம் காணப்பட்டுள்ளதாக விசாகபட்டினம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விசாகபட்டினம் கொண்டு செல்லப்பட்டோர் விபரம் வருமாறு: ஜெயச்சந்திரன், கே. நாயகன், எஸ். சிவராஜன், எஸ். இந்திரலிங்கம், ஏ. சுபாஸ்சந்திரா, எஸ். பாலகிருஷ்ணன், மோகன் ஆகியோராவர். (க–சி)

### யாழ். குடா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம்பத்தில் புலிக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன.

பாடசாலைகளுக்கு மாணவர்கள் வரவு மிகவும் குறைவாகக் காணப்பட்டதுடன் அனைத்துப்பாடசாலைகளும் நேரத்துடன் மூடப்பட்டன. பாடசாலைகளில் பாடசாலைக் கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்க விடப்பட்டிருந்தன

யாழ். நகரப் பகுதியில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்று மூடப்பட்டிருந்தன. சோக கீதங்கள் எங்கும் ஒலித்த வண்ணம் இருந்தன எங்கும் வாழை தோரணங்களே காணப்பட்டன.

யாழ். மாநகரசபை, கல்வித்திணைக்களம், செயலகம். பிரதேச செயலகங்கள், காரியாலயங்கள் தோறும் அரைக்கம்பத்தில் புலிக்கொடிகள் பறக்க விடப்பட்டன.

யாழ்.பஸ் நிலையப்பகுதியிலும் வேறுபல இடங்களிலும் இந்திய அரசின் சதிக்கெதிராகவும் மறைந்த தளபதி போராளிகள் நினைவாகவும் சுலோகங்கள் பல கட்டப்பட்டிருந்தன.

பல்கலைக்கழகத்தில் நேற்று விரிவுரைகள் நடைபெறவில்லை. பெரும்பாலான பாடசாலைகள் குறைந்தளவு மாணவர்களுடன் சிலமணி நேரங்களில் மூடப்பட்டுவிட்டன.

ஆசிரியர்கள், மாணவர்கள், அரச உத்தியோகத்தர்களும் கறுப்புப்பட்டி அணிந்திருந்ததைக் காணமுடிந்தது.

வீதிகள், எங்கும் தோரணம் கறுப்புக்கொடி கட்டப்பட்டிருந்தது. வீடுகள் தோறும் கறுப்புக்கொடி பறக்க விடப்பட்டிருந்தது. குடாநாடெங்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்களும் வெளியிடப்பட்டன நல்லூர் வர்த்தக சங்கத்திற்குட்பட்ட அனைத்துக் கடைகளும் மூடப்பட்டிருந்தது.

சந்தைகளும் நேரத்துடன் கலைந்து காணப்பட்டது. இன்று சந்தையும் வியாபாரம் இடம்பெற மாட்டாது. எனவும் தெரிவிக்கப்பட்டது.

எங்கும் ஒரே சோகமயமாகவே காட்சியளித்தது. (157 – 56)

### நரசிம்மராவ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் உட்படப் பல பொது அமைப்புக்கள் இவர்களின் கொடும்பாவிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அலுவலக வாசலில் வைத்து தகனக்கிரியைகளை நேற்று நடத்தின.

இவ்வூர்வலங்களிலும். கொடும்பாவி எரிப்பிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

ஒப்பாரிகள் எழுப்பியவாறு சென்ற ஊர்வலத்தினரால் இந்த இருவரதும் கொடும்பாவிகள் கட்டி இழுத்துவரப்பட்டன

"அம்மா நீ கதிரையிலே ஏறையிலேயே எம்மைக் காப்பாய் என்றல்லோ நினைத்தோம். சயவருடன் சேர்ந்தவளே உன்னால் தமிழனுக்கு கதியல்லோ விழுந்திட்டுது" போன்ற பல ஒப்பாரிகள் ஊர்வலத்தினரால் எழுப்பப்பட்டன.

கொடும்பாவி தகனஞ்செய்யப்பட்ட யாழ்ப்பாணம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் வாசல் பகுதி, சுடுகாடு போல் நேற்றுக் காட்சியளித்தது

ஆனைப்பந்திச் சந்தி, சங்கானை, பண்ணாகம் பகுதிகளிலும் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டன.

யாழ் குடாவின் பல பகுதிகளில் இன்றும் நரசிம்மராவ், ஜெயலலிதா ஆகியோரின் கொடும்பாவிகள் இழுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(56-71-159-159)

### திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலை 8-30 மணியளவில் புல்மோட்டை 14ம் கட்டை இராணுவ முகாமிலிருந்து ரோந்து வந்த ராணுவ அணியே புலிகளின் தாக்குதலுக்குள்ளானது.

புல்மோட்டை 14ம் கட்டை ராணுவ முகாமுக்கும்-டபிள் மலை ராணுவ முகாமுக்கும் இடையில் ரோந்து வந்து கொண்டிருக்கும்போது விடுதலைப்புலிகள் சுற்றி வளைத்து நடத்திய தாக்குதலில் இராணுவ அணியினர் நிலைகுலைந்தனர். கொல்லப்பட்டவர்களை தவிர ஏனையவர்கள் காயங்களுடன் சிதறி ஓடினார்கள்.

இதேவேளை தாக்குதலுக்கு இலக்கான படைகளுக்குதவ 14ம் கட்டை முகாமிலிருந்தும், டபிள் மலை முகாமிலிருந்தும் இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியை புலிகளின் மற்றொரு அணியினர் முறியடித்தனர்.

டபிள் மலை முகாம் இராணுவத்தினர் தமது முன்னேற்ற முயற்சிக்கு 4 கவச வாகனங்களைப் பயன்படுத்தியும் புலிகளின் தாக்குதலினால் பின்வாங்கியதாகத் தெரியவருகிறது.

இத்தாக்குதலில் ஏ. கே. எல். எம். ஜி - 1, ரி 81 ரக துப்பாக்கிகள் 8, ரி 56 ரக துப்பாக்கி - 1, ஏ. கே. எல். எம். ஜி ரவைக்கூடு - 1, தொடர்ரவைகள் 50, ரி 81 ரகதுப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் - 24, நடுத்தரரவைகள் - 1294, ஜே. ஆர். கைக் குண்டுகள் - 02, ஏ. கே. ரக ரவைக் கூடுகள் - 04 உட்பட பல ராணுவ தளபாடங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன. (ரி)

## அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மறைந்த மாவீரர் தளபதி கேணல் கிட்டுவுக்கும் ஏனைய போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக நாளை புதன்கிழமை நடைபெறவுள்ள ஊர்வலப் பவனியின் பங்குபற்றும் முகமாக வடமாகாண அரசாங்க ஒப்பந்தகாரர் சங்க அங்கத்தவர்களையும் அவர்களுடன் பணிபுரியும் தொழிலாளர்களையும் புதன்கிழமை காலை 11-00 மணிக்கு தாவடிச் சந்தியிலுள்ள தமது சங்க காரியாலயத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுள்ளனர்.

### இந்தியாவின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகளின் இராணுவ அணிவகுப்புடன் முன்னே செல்ல ஊர்வலம் நெல்லியடி சந்தியில் இருந்து பி.ப 2 மணிக்கு ஆரம்பமாகி வதிரிச் சந்தி உடுப்பிட்டி ஊடாக திருவிலை சென்றடையும் இதனைத் தொடர்ந்து இவ்வீரர்களின் நினைவுக்கல் நடுகை இடம் பெறும் பி. ப. 5. 30 மணியளவில் கண்டக்கூட்டம் ஆரம்பமாகும்.

எம்தேச விடுதலைக்கான உரிமைப் போராட்டத்தை தன் சுயநல நோக்கிற்காக நசுக்க முயலும் இந்தியாவின் கபடத்தனத்தை உலகிற்கு எடுத்துக்காட்ட அணிதிரளுமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்.

### சவூதி மீது ஈராக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசித்தாக்கின. இத்தாக்குதலில் 450 கிலோ கொண்ட குண்டுகள் வீசப்பட்டன. இந்தச் சம்பவத்தில் 20பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஈராக்கின் தென்பகுதியில் இந்த தாக்குதல் இடம்பெற்றது.

சவூதி அரேபியா, குவைத் மீது ஈராக் தாக்குதல் நடாத்தக்கூடுமென்பதால் அந்நாடுகள் எச்சரிக்கையாக இருக்கின்றன என்றும் மீண்டும் வளைகுடாப்போர் அபாயநிலையில் இருக்கின்றது என்றும் கூறப்படுகிறது. (சு)

### இராணுவத்துடனான

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

சத்தியேந்திரன், வித்தியாலய ஒழுங்கை, திருமலை), கப்டன் செல்வக்குமரன் அல்லது சுகுமார் பத்மசிங்கம் ராகவன் கடற்கரைச்சேனை, மூதூர்), கப்டன் வீணைக்கொடியான் அல்லது வர்ணன் (சண்முகலிங்கம் விஜயன், தம்பலகாமம்), லெப் கார்வண்ணன் (பொன்னுக்கோன் செல்லக்கோன் 2-ம் வாட் நிலாவெளி) லெப். காண்டீபன் (கனகரட்னம் செல்வராசா முள்ளிப்பொத்தானை தம்பலகாமம்), வீர வேங்கை பிலியன் (இருதயநாதன் மங்கம் கோல்சிப் விஜிநகர் திருமலை) வீர வேங்கை இளவேனில் அல்லது அசாந் (தில்லையம்பலம் ரவீந்திரன் தம்பலகாமம்), வீர வேங்கை இளவரசு அல்லது ரவிகாந்த் (இராசரட்ணம் சிவநேசன், பள்ளிக்குடியிருப்பு மூதூர்).

இதேவேளை அளவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலொன்றில் எல்லாளன் அல்லது விகடர் (இராசதுரை சிறிகாந்தன், சுழிபுரம்தெற்கு) என்ற போராளியும் வீரச்சாவு அடைந்தார். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர். (ரி)

## மரண அறிவித்தல்

### ஜெயன் இராசம்மா அழகையா

உடுவிலைச் சேர்ந்த ஜெயன் இராசம்மா அழகையா காலமானார் இவர் காலம் சென்ற சின்னத்தம்பர் அழகையாவின் அன்பு மனைவியும் காலம் சென்ற ஜெயசிங்கம், புஸ்பவதி (அவுஸ்திரேலியா), மகிழ்வதி, சத்தியசிங்கம், ஆகியோரின் அன்புத் தாயாரும். காலம் சென்ற அலபிறேத் பிச் (Fitch) இரத்தினசிங்கம், இந்திராணி ஆகியோரின் மாமியும் ஆவார். அன்னாரின் நல்லடக்கம் 08-01-93 அன்று உடுவில் சேமக்காலையில் நடைபெற்றது.

தகவல்:
இ. மகிழ்வதி (மகள்)
அ. சத்தியசிங்கம் (மகன்)

(சி-7154)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி மேற்கு வீதி,63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Nnmber B/10336/B